# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

அசல் மனு எண் : 0661 /2016 / ந

ஆணை எண் : 099 /2017

நாள்: 05/05/2017

திரு. இரா. பார்த்தசாரதி,
இரும்புலியூர், — முறையீட்டு மனுதாரர்
தாம்பரம் கிழக்கு.

நகராட்சி ஆணையர்,
தாம்பரம் நகராட்சி — எதிர் மனுதாரர்கள்
மற்றும் பிறர்.

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 06.07.2016 நாளிட்ட மனு 08.07.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்குறிப்பிட்டவாறான குறைபாடுகள் உள்ளதை சுட்டிக்காட்டப்பட்டு அறிவிப்பாணை (அ.ம.எண்:0661/2016/ந நாள்:13.07.2016) அனுப்பப்பட்டது:-

"(i) 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள், விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறான ரூ10/-க்கான (ரூபாய் பத்து மட்டும்) நீதிமன்ற வில்லைக் கட்டணம் ஒட்டப்படவில்லை;

(ii) தாம்பரம் நகராட்சி ஆணையரது ஆணையின் பேரிலேயே முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அரசு செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளது;

(iii) பதவி உயர்வு குறித்து மனுதாரரது சம்மதக் கடிதம் போன்று போலியான ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கருதும் பட்சத்தில் காவல் துறை குற்றப்பிரிவிற்கு புகார் தாக்கல் செய்யப்பட்டதா என்பதற்கான விவரம்/ஆதாரம் ஏதும் அளிக்காதது.

2. இந்நிலையில் மேற்படி விதிகளின், விதி 8 ன் படி முறையீடு குறைபாடுகளுடையது எனத் தெரிவித்து அசல் மனு இணைப்புகளுடன் மனுதாரருக்கு திருப்பி அனுப்பப்பட்டதுடன், மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு மனுதாரரது முறையீடு தாக்கல் செயயப்படும் பட்சத்தில், விதி 4 ன் கீழ் புதிய முறையீடாக பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுமெனத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரரது 02.08.2016 நாளிட்ட கடிதத்துடன், உரிய படிவத்திலான முறையீட்டு மனு, நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடன் 03.08.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி கடிதத்தில் முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டுள்ளவாறான தனது விளக்கங்களையும் சமர்ப்பித்துள்ளார்:-

> "நகராட்சி ஆணையர் மீதான நடவடிக்கை எடுக்கக்கூடிய உயர் அலுவலர்கள் என்பதால் அரசு செயலர் மற்றும் நதராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாக சேர்த்ததாகவும், இருப்பினும் மாண்பமை முறைமன்ற நடுவர் முடிவிற்கு விடப்படுகிறது ஏற்கெனவே வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு ஊழல் தடுப்பு (10) கண்காணிப்பு துறைக்கு (13.04.2016) அனுப்பியுள்ளதால் ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு துறையின் 27.04.2016 கடிதத்தில் தெரிவித்தபடி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 ன் கீழ் பொதுப் பணியாளருக்கெதிரான கையூட்டு/ முறைகேடான நிர்வாகம் ஆகியவற்றை எதிர்த்த குற்றச்சாட்டுகளை இம்முறைமன்ற நடுவத்திடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காவல்துறையில் எவ்வித குற்றப் புகார்களும் தாக்கல் செய்யவில்லை."

4. மேற்படி முறையீட்டு மனுதாரரது விளக்கங்கள் பரிசீலிக்கப்பட்டு, முறையீட்டு மனு 0661/16 ஆக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டமைக்கான ஒப்புகை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும், எதிர்மனுதாரர்களாக தாம்பரம் நகராட்சி ஆணையரையும், திரு. ப. கண்ணன் மின் பணியாளர் நிலை I ஆகியோரை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்கள் தரப்பிலான எதிர்வாதுரை/அறிக்கை தாக்கல் செய்யுமாறு ஆணையிட்டு அறிவிப்பாணை அசல்

மனு எண்:0661/2016/ந நாள்:08.08.2016 அனுப்பிவைக்கப்பட்டது. அதன்படி தாம்பரம் நகராட்சியின் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர்(பொறுப்பு) திரு.V. முருகேசன் அவர்களது அறிக்கை ந.க.எண்:7564/2010/சி1 நாள்:25.08.2016, 01.09.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. அவ்வறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"தாம்பரம் நகராட்சியில் மின் பணியாளர் நிலை I பணியிடம் 2004 முதல் காலியாக உள்ளது. இப்பணியிடத்தினை நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு நகராட்சி ஆணையரின் 30.01.2012 ம் தேதிய 7564/2010/இ3 எண்ணிட்ட கடிதத்தில் செயற் குறிப்பு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் 26.11.2013–ம் தேதிய 21907/2013/எப்3 எண்ணிட்ட கடிதத்தில் மின் பணியாளர் நிலை-I பணியிடத்தை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் சார்நிலை பணி விதிகள் 1970 ன் படி பதவி உயர்வின் மூலம் பூர்த்தி செய்து கொள்ள அனுமதி அளித்துள்ளார்.

தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சார்நிலை பணி விதிகள், 1970ன் படி மின் பணியாளர் நிலை I க்கு கீழ்க்கண்டவாறு தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

class – iv

<u>category 4</u>

should possess:-

iv) The diploma in Electrical or Mechanical Engineering of the Technological Diploma Examination Board, Chennai

v) The electrician trade certificate awarded by the National Council for Training in Vocational Trades;

(or)

vi) (a) a certificate having passed III from VIII standard in a recognized school, and

(b) one year experience in pump and pumping machinery and 3 years experience in an Electrical undertaking or any firm undertaking installation and repairs to electrical and pumping machinery.

அரசு ஆணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.06.2008 ல் தமிழ் நாடு பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் விதிகள், 1970க்கு வழங்கிய விதி திருத்தத்தில் மின்பணியாளர் நிலை-I பணியிடத்தினை மின் கம்பியாளர் மற்றும் மின் பணியாளர் நிலை-II ஆகிய பணியிடங்களிலிந்து 2:1 என்ற விகிதாசார அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பெறவேண்டும்.

இவ்வரசாணையின்படி தாம்பரம் நகராட்சியில் மின் பணியாளர் நிலை I பணியிடத்தினை மின் கம்பியாளர் பணியிடத்தில் பணிபுரியும் நபர்களிலிருந்து முதுநிலை அடிப்படையில் தகுதியானவரை தேர்ந்தெடுத்து பதவி உயர்வு வழங்க வேண்டும்.

தாம்பரம் நகராட்சியில் மின் கம்பியாளர் பணியிடத்தில் கீழ்க்கண்ட நபர்கள் பணியாற்றிவருகின்றனர்.

| வ.எண் | பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | S. கபிலன் | 08.06.1990 |
| 2 | R.பார்த்தசாரதி | 08.06.1990 |
| 3 | R. மனோகரன் | 07.09.1990 |
| 4 | G. பாஷ்யம் | 24.07.1991 |
| 5 | R. வேலு | 06.07.2012 |

மேலே குறிப்பிட்டவர்களில் மின் பணியாளர் நிலை I பணியிடத்திற்கு உரிய கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். ஆனால் இவர்கள் செயல்முறை பயிற்சி (practical experience) பெற்றிருக்கவில்லை. எனினும், இவர்கள் அனைவரும் P.கண்ணன் என்பவருக்கு மின் பணியாளர் நிலை I க்கு பதவி உயர்வு வழங்க ஆட்சேபணை ஏதும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் 14.03.2009-ல் ந.க.எண்.35407/2008/எப்3 அளித்துள்ள முதுநிலைப்பட்டியலின் படி மின் பணியாளர் நிலை II ல் வ.எண்.91 ல் உள்ள திரு. P. கண்ணன் என்பவருக்கு மின் பணியாளர் நிலை I ஆக பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளது. இவர் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றுள்ளார்.

1) **Academic qualification** : xth passed

2) **Technical qualification** : i) DECE passed and ESE (Eectrical superviser Competency) passed c licence

ii) Degree of B.Tech Electrical and electronic Engineering Nov. 2012

3) **Experience** : Various Municipal Engineers,Tambaram Issues experience certificates.

தமிழ்நாடு பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கு சார்நிலைப்பணி விதிகளின்படி மின் பணியாளர் நிலை I பணியிடத்திற்கு மின் கம்பியாளர் பணியிடத்தில் பணிபுரியும் தகுதியுள்ள நபர்களிலிருந்து முதுநிலைப்படி பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

இதன்படி மின் கம்பியாளர்களில் முது நிலைப்படி முதலிடத்தில் உள்ள திரு. S. கபிலன் என்பவர் பெயர் பரிசீலிக்கப்பட வேண்டும். இதன் பிறகு திரு.பார்த்தசாரதி, மின் கம்பியாளர் பெயர் பரிசீலிக்கப்பட வேண்டும். இவரும் இப்பணியிடத்திற்குரிய முழு தகுதி பெற்றிருக்கவில்லை. மேலும், இவர்கள் திரு. P. கண்ணன், மின் பணியாளர் நிலை I க்கு பதவி உயர்வு செய்ய ஆட்சேபணை ஏதம் இல்லை என தெரிவித்துள்ளனர். இவ்வாறு கடிதம் கொடுத்தவர்களில் திரு.பார்த்தசாரதி மட்டும் தான் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை என தெரிவித்துள்ளார். இதன் உண்மைத்தன்மையை அறிய இவ்வலுவலக கடிதம் நாள் 05.05.2016–ல் திரு. ஆர். பார்த்தசாரதி மற்றும் திரு. P. கண்ணன் ஆகியோர்களுக்கு குறிப்பாணை அனுப்பப்பட்டு மேற்படி கடிதம் பொய்யானது என பின்னர் தெரியவந்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர்களிடமிருந்து பதில் வரப்பெற்று தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மின் கம்பியாளர்களில் (Wireman) எவரும் மின் பணியாளர் நிலை I–க்குரிய முழு தகுதி பெற்றிருக்கவில்லை என்பதால், இதற்கடுத்த பணியிடமான மின் பணியாளர் நிலை II ல் பணிபுரியும் திரு.P.கண்ணன் அவர்களுக்கு மின் பணியாளர் நிலை I க்கு முழு தகுதி பெற்றிருப்பதால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இப்பதவி உயர்வு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத் நாள் 26.11.2013ல் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்த பிறகே அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | தமிழ்நாடு நகராட்சிகளின் பொறியியல் சார்நிலைப்பணி விதிகள், 1970 ன்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும். | விதிகளின்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 2) | பணியாளர் செலவினம் 49%க்குள் இருப்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். | பணியாளர் செலவினம் 49%க்கு குறைவாக உள்ளது. |
| 3) | நகர்மன்றத்திற்கு பொருள் வைத்து தீர்மானம் பெறப்படவேண்டும். | நியமனக்குழு தீர்மான எண்.5 நாள் 20.08.2015ல்தீர்மானம் பெறப்பட்டுள்ளது. |
| 4) | அரசு ஆணை எண்.113, நதராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.06.2008, சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் WP.20459/2009 மற்றும் வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் தடையாணை நாள்.08.10.2009 இவைகளுக்கு உட்படுத்தி பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். | இவ்வழக்கு உயர்நீதி மன்றத்தில் W.P. 1/2010 நாள்.30.04.15ல் திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டது. |

மேற்கண்ட விபரங்களிலிருந்து திரு. P. கண்ணன், மின் பணியாளர் நிலை II மேற்படி பதவிக்கு உரிய கல்வி, தொழில்நுட்ப தகுதி மற்றும் அனுபவ பயிற்சி பெற்றிருந்ததாலும், தாம்பரம் நகராட்சியில் கடந்த 20 ஆண்டுகளாக குடிநீர் வழங்கு பிரிவில் மின் மோட்டார்கள் பராமரிப்பு போன்ற பணிகளில் செவ்வனே ஈடுபட்டு வருவதாலும் மின் கம்பியாளர் பணியிடத்தில் உள்ள வேறு எவரும் இப்பணியிடத்திற்குரிய முழுத் தகுதி பெற்றிருக்கவில்லை என்பதாலும் திரு. P. கண்ணன் என்பவருக்கு விதிகளுக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

திரு. R. பார்த்தசாரதி, மின்கம்பியாளர் என்பவர் 25.06.2015ந் தேதிய கடிதத்தில் மின் பணியாளர் நிலை I க்கு திரு. P. கண்ணன் என்பவருக்கு பதவி உயர்வு அளிக்கும்போது நோட்ரி பப்ளிக் வழக்கறிஞர் முன்னிலையில் முழு சம்மதம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் அளித்துவிட்டு, பின்னர் 10.03.2016-ல் தாம் கையொப்பமிட்டு ஒப்புதல் கடிதம் வழங்கவில்லையென்றும் மேற்படி கையொப்பம் போலியானது என ஆட்சேபணை தெரிவித்துள்ளார். மேற்படி பணியாளருக்கு 21.08.2015ந் தேதி பதவி உயர்வு அளிக்கப்பட்டு 6 மாதங்கள் 19 நாட்களுக்குப் பிறகு மேற்படி கடிதம் தன்னால் அளிக்கப்படவில்லையென ஆட்சேபணை தெரிவித்துள்ள செயல் முரண்பாடாக உள்ளது. எனவே, மேற்படி ஆட்சேபணை கடிதத்தின் பேரில் உரிய விளக்கம் அளிக்க திரு. P. கண்ணன் என்பவருக்கும், திரு. பார்த்தசாரதி என்பவருக்கும் குறிப்பாணை அளிக்கப்பட்டது.

திரு. P. கண்ணன், மின் பணியாளர் தனது 15.05.2016ந்தேதிய விளக்க கடிதத்தில் தான் மின்பணியாளர் நிலை IIல் பணி புரிந்து மின் பணியாளர் நிலை I பதவிக்கான முழுதகுதியும் பெற்றதனாலேயே தனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதாகவும், திரு.பார்த்தசாரதி என்பவரிடம் ஆட்சேபணையில்லையென ஒப்புதல் கடிதம் பெற்றது தொடர்பாக தனக்கு எவ்வித தகவலும் தெரியாது எனவும், சட்ட விதிகளுக்குட்பட்டும், தகுதியிம் அடிப்படையிலுமே தனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

திரு. பார்த்தசாரதி, மின்கம்பியாளர் தனது 10.03.2016 ந்தேதிய கடிதத்தில் தான் மேற்படி ஆட்சேபணையில்லையென தெரிவித்த கடிதம் ஏதும் வழங்கவில்லையெனவும், மேற்படி கடிதத்தில் உள்ள கையொப்பம் போலியானது எனவும் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் விசாரணை நடைபெற்று வரும் நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி குறை தீர்க்கும் மன்றத்திடம் முறையிட்டுள்ளார்.

மேற்படி பொருள் சம்பந்தமான கோப்புகளை ஆய்வு செய்ததில் மேற்படி பதவி உயர்வு சட்ட விதிகளுக்குட்பட்டே வழங்கப்பட்டுள்ளது எனவும், திரு.R.பார்த்தசாரதி என்பவர் பதவி உயர்வு வழங்கப்படும் நாளில் மேற்படி பதவி உயர்வுக்கான முழுத்தகுதியும் பெறவில்லையென்பதாலும், திரு. P. கண்ணன் என்பவர் தாம்பரம் நகர மன்ற நியமனக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பதவி உயர்வுக்கு இதர பணியாளர்களிடமிருந்து ஒப்புதல் கடிதமோ அல்லது ஆட்சேபணையில்லையென்ற கடிதமோ பெறப்படவேண்டியதில்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே மேற்படி திரு. P. கண்ணன், மின் பணியாளருக்கு நிலை I பதவி உயர்வு உரிய விதிகளின்படியே வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5. இதனைத் தொடர்ந்து 20.09.2016 அன்று முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கும் நகராட்சி ஆணையருக்கும் தனித்தனியே அழைப்பாணைகள் (அசல் மனு எண்:0661/2016/ந1(ம)2 நாள்:02.09.2016) அனுப்பப்பட்டன. அதன் பின்னர் நடைபெறவிருந்த உள்ளாட்சி சாதாரண தேர்தல்களைக் கருதி நகராட்சி ஆணையருக்கான விசாரணை ஒத்திவைக்கப்பட்டு அறிவிப்பாணை (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:16.09.2016) அனுப்பிவைக்கப்பட்டது.

6. இம்முறைமன்ற நடுவம் 02.09.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி 20.09.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டுள்ளவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்:-

"06.07.2016 நாளிட்ட முறையீட்டு என்னால் தான் அனுப்பப்பட்டது, இதற்கு முன்பு லஞ்ச ஒழிப்பு துறைக்கு மனு அனுப்பினேன். நான் தெருவிளக்கு மின்கம்பியாளராக தாம்பரம் நகராட்சியில் 08.06.1990 முதல் பணி புரிகிறேன். மின்னாளர் நிலை 1 என்ற பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு ஐடிஐ தொழிற்பயிற்சி நிலையத்தில் பயின்று உரிய சான்று பெற்றிருக்கிறேன். பதவி உயர்வுக்கு எலக்ட்ரிசன் படிப்பு படித்தால் போதுமானது. அந்தப் பணியில் அனுபவம் இருக்க வேண்டும். என் போன்ற 5 நபர்கள் அங்கு தெருவிளக்கு மின்கம்பியாளராக வேலை பார்க்கிறார்கள். அதில் முதல் நிலையில் உள்ளது நான் தான். எனக்கு பதவி வழங்காமல் திரு.பி.கண்ணன் (மின்னாளர் நிலை 2), 17.03.2006 அன்று அவர் பணியில் சேர்ந்தார் இவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 21.08.2015ல் திரு.கண்ணன் என்பவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. அரசாணை 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.06.2008ன் படி ஒரு பணிமூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த அரசாணையில் 2:1 இரண்டு பதவிகள் தெருவிளக்கு மின்கம்பியாளருக்கும், ஒரு பதவி மின்னாளர் நிலை 2க்கும் வழங்கலாம் என்று அந்த அரசாணை கூறப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்மேல் திரு.பி.கண்ணன் என்பவர் வழக்கு எண்.WP No.20459/2009 அந்த வழக்கை வாபஸ் வாங்கிய நாள் 30.04.2015. இந்த பணிமூப்பு பட்டியலில் திரு.பி.கண்ணன், 91வது இடத்தில் உள்ளார். 30.07.2015 அன்று பதவி உயர்வு வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் கொடுத்தேன். திரு.பி.கண்ணன் அவர்கள் பதவி உயர் வழங்கியது சம்பந்தமாக ஆணையாளரிடம் பலமுறை நேரடியாக பதவி உயர்வு எந்த அடிப்படையில் வழங்கியது என்று கேட்டேன். அதனடிப்படையில் பதவி உயர்வு சம்பந்தமாக 18.09.2015 அன்று நகராட்சி நிர்வாக ஆணையருக்கு மனு ஒன்றினை பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பினேன். அதே தேதியில் தாம்பரம் நகராட்சியில் தகவல் உரிமை சட்டம் மனு செய்தேன். அந்த தகவல் உரிமை சட்டத்தின் பதில் கிடைத்த நாள் 23.10.2015. இதன்பிறகு போலியாக தயாரிக்கப்பட்ட ஒப்புதல் கடிதம் தெருவிளக்கு சங்கம் மூலம் எனக்கு கிடைத்தது. இதுசம்பந்தமாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், ஆணையர் அவர்களுக்கும் 10.03.2016 அன்று பதிவு தபால்

மூலம் மனு அனுப்பினேன். தாம்பரம் நகராட்சி அனைத்து பணியாளர் சங்கத்தின் மூலமாக 15.03.2016 அன்று மனு செய்தேன். இதுபோன்று போலியாக தயாரிக்கப்பட்ட கடிதத்தின் மேல் நடவடிக்கை வேண்டி நினைவூட்டல் கடிதம் 23.3.2016ல் ஆணையாளரிடம் கொடுத்தேன். அதன்பின் தாம்பரம் அனைத்து நகராட்சி பணியாளர் சங்கத்தின் மூலமாக தலைமைச் செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்த போலியான கடிதத்தின் மேல் நடவடிக்கை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. இரண்டு பேரிடமிருந்து எந்த வித ஆணையும் எந்த பதிலும் நான் பெறவில்லை. 13.04.2016 அன்று வழக்கறிஞர் மூலமாக நகராட்சி ஆணையருக்கும் இந்த போலியான ஒப்புதல் கடிதத்தின் மேல் நடவடிக்கை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. இது குறித்து லஞ்ச ஒழிப்புத் துறைக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பிறகும் எந்த பதிலும் இல்லை, அங்கிருந்து அவர்கள் உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்ய சொன்னார்கள், அதன் பிறகு தான் இங்கு மனு செய்தேன். என்னுடைய கையெழுத்தை இன்னொருவர் போட்டு திரு.கண்ணன் என்பவருக்கு பதவி உயர்வு வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என போலியான ஒப்புதல் கடிதம் ஆணையாளரிடம் கொடுக்கப்பட்டது, காவல் துறை குற்றப்பிரிவுக்கும் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடன் தெருவிளக்கு மின்கம்பியாளராக பணிபுரிந்து வருகிறார்கள். இந்த வரிசையில் நான் முதலில் உள்ளேன். (திரு.எஸ்.கபிலன், திரு.ஆர்.மனோகரன், திரு.ஜி.பாஷியம், திரு.ஆர்.வேலு). ஆனால் திரு.பி.கண்ணன் அவர்கள், மின்னாளர் நிலை 2 பணிபுரிந்து வந்தார். அவர் பணி நியமனம் நாள் 17.03.2006. இது குறித்த ஆவண நகல்களை இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். தகுதியுள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ கடிதம் நகராட்சிக்கு சென்றபின் பின்பு 16.08.2016 அன்று 05.05.2016 என முன்தேதியிட்டு எனக்கு கடிதம் சார்பு செய்யப்பட்டது. அதற்கு நான் பதில் கடிதமும் பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளேன். அதனுடைய நகல் மற்றும் நான் அளித்த பதில் நகல் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்."

முறையீட்டு மனுதாரரது மேற்படி வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு, அதன்மீதும் இப்பொருள் குறித்து ஏற்கனவே மனுதாரர் தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு முறையீடு செய்துள்ள 10.03.2016 மற்றும் 11.03.2016 நாளிட்ட மனுக்களின் மீதான தக்க பதில்களை மனுதாரருக்கு அளித்து அதன் விவரங்கள் மற்றும் நகல்களுடன் அறிக்கை தாக்கல் செய்யுமாறு தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு வலியுறுத்திட முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே இம்முறை மன்ற நடுவத்தால்

ஆணையிடப்பட்டது. (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:28.09.2016). மேற்படி அறிக்கை வரப்பெறாத நிலையில் 25.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து நகராட்சி ஆணையருக்கு அழைப்பாணை (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:17.10.2016) அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணையன்று தாம்பரம் நகராட்சி ஆணையர் ஆஜராக தவறியதால் 23.11.2016 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டு அழைப்பாணை (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:31.10.2016) அனுப்பப்பட்டது.

7. தாம்பரம் நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்:1856/2015/சி1 நாள்:22.11.2016 உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் விடுப்பு எடுத்துள்ளதால் விசாரணைக்கு 23.11.2016 அன்று தன்னால் வர இயலாத நிலையினைக் குறிப்பிட்டு தனது சார்நிலை அலுவலரை (துப்புரவு அலுவலரை) மேற்படி கடிதத்துடன் இமம்முறை மன்ற நடுவம் முன்பு ஆஜராகிட பணித்திருந்தார்.

8. இமம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்:0661/2016/ந நாள்:28.09.2016 ன்படி இரண்டு வாரங்களுக்குள் கோரப்பட்ட அறிக்கை வரப்பெறாததற்கு, கண்டனத்தை பதிவு செய்தும் இப்பொருள் குறித்து 06.12.2016 அன்று தவறாமல் விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கம்/வாக்குமூலம் அளிக்கப்படவேண்டுமென வலியுறுத்தியும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:25.11.2016). 06.12.2016 அன்று அரசு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டதால் மேற்படி விசாரணை 27.12.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டது. 27.12.2016 அன்று திரு.C.மதிவாணன், தாம்பரம் நகராட்சி ஆணையர் நேரில் ஆஜராகி முறையீட்டு மனுதாரரது முறையீட்டு மனு குறித்து தனக்கு தெரியுமெனவும், 25.08.2016ல் ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், முறைமன்ற நடுவ ஆணைகளின்படி முறையீட்டு மனுதாரரது கோரிக்கையை பரிசீலனை செய்து 30.12.2016—க்குள் மனுதாரருக்கு உரிய பதில் அனுப்பி அதன் விவரத்தை ஒரு வாரத்திற்குள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிப்பதாகவும் அவரால் உறுதியளிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறான அறிக்கை வரப்பெறாத நிலையில் 25.01.2017 க்குள் இறுதி அறிக்கை இம்முறை மன்ற நடுவத்தில் கண்டிப்பாக சமர்ப்பிக்கப்படவேண்டுமென வலியுறுத்தி ஆணையிடப்பட்டது. (அசல் மனு எண்:0661/2016/ந நாள்:13.01.2017). அதன்படி முறையீட்டு மனுதாரரது கோரிக்கை தொடர்பான மனுக்களுக்கு பதிலளிக்கப்பட்டு (ந.க.எண்.7564/2010/சி1 நாள்:20.01.2017) அதன் நகலுடன் நகராட்சி ஆணையரது அறிக்கை வரப்பெற்றது. முறையீட்டு மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறான பதில் நதராட்சி ஆணையரால் அளிக்கப்பட்டுள்ளது:-

*"இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் காலியாக இருந்த மின் பணியாளர் நிலை I பணிக்கு திரு.பி.கண்ணன் என்பவர் உரிய தகுதி பெற்றிருந்ததாலும் இவர் ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்ததால் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் சட்ட கருத்துரு பெற்று மின் பணியாளர் நிலை 2-லிருந்து மின்பணியாளர் I-க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றும், இந்நகராட்சியில் மின் பணியாளர் நிலை I-க்கு பணியிடம் காலி ஏற்படும்போது உரிய விதிகளுக்கு உட்பட்டு விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்."*

9. மேற்கண்டவாறு முறையீட்டு மனுதாரருக்கு பதிலளிக்கப்பட்டுள்ள நிலையில், பணியமைப்பு தொடர்பான மனுதாரரது கோரிக்கை/புகார் குறித்து, தேவையெனக் கருதும் பட்சத்தில் உரிய மேல் முறையீட்டினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலமாக துறைத் தலைவரிடத்தில் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்துக் கொள்ளலாமெனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

மேலும், முறையீட்டு மனுதாரரின் போலி ஒப்புதல் கடிதம் புகார் குறித்து, அக்கடிதத்தின் உண்மைத்தன்மையை தடயவியல் துறையின் அறிக்கை பெற்று, ஆய்வு செய்து உரிய நடவடிக்கையை துரிதமாக முடித்து நடவடிக்கை அறிக்கையை இம்முறை மன்ற நடுவத்திற்கு இரண்டு மாதத்திற்குள் அனுப்பிவைக்கும்படி தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒப்பம்/

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/உண்மை நகல்

உதவி பதிவாளர்.

பெறுநர்

1. திரு. இரா. பார்த்தசாரதி,
எண்20A, பிள்ளையார் கோவில் தெரு,
இரும்புலியூர், தாம்பரம் கிழக்கு,
சென்னை - 600 059.

2. நகராட்சி ஆணையர்,
தாம்பரம் நகராட்சி,
தாம்பரம், சென்னை.

3. திரு. பி. கண்ணன்,
மின் பணியாளர்,
தாம்பரம் நகராட்சி,
தாம்பரம், சென்னை.

4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5.